**அக்டோபர்: 15**

## யார் அவருடைய ஆத்தும தாகத்தை தீர்ப்பார்கள்..?

**வாசிக்க: யோவான் 19:1-29**

நம் ஆண்டவரை கெத்சமெனே தோட்டத்தில் கைதுசெய்து முதலில் அன்னா என்கிற ஆசாரியனிடமும் பின்பு பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அழைத்து சென்றனர். அதன் பின் ரோம ஆளுனர் பிலாத்துவிடம் அனுப்பி தண்டிக்க சொன்னார்கள். பிலாத்து அவரை கொல்லாமல் விடுதலை செய்ய திட்டமிட்டு, இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்து முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, யூதர்களுக்கு முன் நிறுத்தி. நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். அவர்களுடைய தொல்லை தாங்க முடியாமல், அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள், அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டுபக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது, அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.





மேலே எழுதியுள்ளபடி நம் ஆண்டவரை கெத்செமனே தோட்டத்தில் கைது செய்து அன்னா என்கிறவனிடம் அழைத்து சென்று, பின் காய்பா என்னும் பிரதான ஆசாரியனிடமும் வீட்டில் வைத்து விசாரணை செய்தனர். அவர்களால் மரணதண்டனை தரமுடியாது என அறிந்தவுடன், பிலாத்துவிடம் அனுப்பினர். பிலாத்து தான் தப்பித்து கொள்ள ஏரோதுவிடம் அனுப்ப, ஏரோது மறுபடியும் பிலாத்துவிடமே விசாரிக்கும்படி அனுப்பி விட்டான். இது எல்லாம் வியாழக்கிழமை இரவே நடந்தது. வெள்ளி அதிகாலை பிலாத்துவின் கட்டளைப்படி கர்த்தரை சிலுவையில் கை கால்களில் ஆணிகளால் அடித்து உடலிலுள்ள இரத்தமெல்லாம் வடிய சித்திரவதை செய்தனர். அதுவரை தனக்கு ஏதாவது வேண்டும் என கேட்காமல், பிதாவின் பிரிவினால் வேதனையோடு இருந்தவர், அப்போது தான் "நான் தாகமாயிருக்கிறேன்" என கூறினார். போர்ச்சேவகர் அவர் சரீர தாகத்திற்கு தண்ணீர் கேட்கிறார் என நினைத்து காடியை கொடுக்கவந்தனர். ஆனால் அவர் சரீரதாகத்தோடில்லை என்பதை நாம் அறியவே அதை அவர் புறக்கணித்தார். சர்வ லோகத்தின் பாவத்தையும் சிலுவையில் சுமந்து, பிதாவை விட்டு 3 மணித்தியாலம் பிரிந்து தாம் வந்த நோக்கத்தை முடித்தபடியால், அதற்குரிய பலனான ஆத்தும தாகத்தால் தவிப்பதையே சொன்னார். அந்த தாகத்தை போக்க ஒரே வழி நீங்களும் நானும் அவரிடம் நம் வாழ்வை அர்பணிப்பதேயாகும். அவருடைய தாகத்தை தீர்க்க உன் வாழ்வை அவரிடம் தருவாயா..?

பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை: தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை, மத்தேயு 25:42

**ஜெபம்**

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க ஒரே பேறான குமாரனை எனக்காக சிலுவையில் பலியாக தந்தீரே. அவர் ஆத்தும தாகம் தீர்க்க இதோ என்னை முழுவதுமாக உங்க பாதத்தில் தருகிறேன். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

